செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது போல மேல் பாதி வடிகாலினையும் அகலப்படுத்தி தூர் வாரி செக்கிலியான் வாய்க்காலுடன் இணைக்க இயலுமா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. ஆய்வின் அறிக்கை வந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அந்த ஆய்வுக்குழு அறிக்கை முடித்து அது சீரமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு அறிக்கை வந்தவுடன் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

ராஜா தோப்பில் அணை கட்டும் திட்டம்.

203—(*வினா எண். 2107) திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி ராஜா தோப்பில் அணைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ரூ. 216 லட்சம் செலவில், அந்த மதிப்பீட்டில் உள்ள இத்திட்டத்தின் மூலம் 500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனவசதி உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் கூடுதல் உணவு உற்பத்தி 426.83 டன்கள் ஆகும். நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 27.5 மில்லியன் கன அடி தண்ணீர் ஆகும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(இ) இத்திட்டத்திற்கென 17.76 ஏக்கர் வனத்துறை நிலங்கள் தேவைப்படுவதால் வனத்துறையின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வொத்திசைவு கிடைக்கப்பெற்றதும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அரசு விரைந்து முடிவெடுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதாகச் சொன்னதற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த அரசுக்கும் நான் காட்பாடி தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தத் திட்டத்தை அல்லது அணை கட்டுகின்ற திட்டங்களை நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற அந்த பாரஸ்ட்நிலம் எடுப்பதிலே கால தாமதம் ஆகின்றது என்று சொல்லப்படுகின்றதே, இதை விரைவு படுத்த இந்த ஆண்டிலேயாவது திட்டம் ஆரம்பிக்கப்படுமா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை நிலத்தை இத்திட்டத்திற்கென அளிப்பதற்கு வனத்துறையால் ஒத்திசைவு கொடுக்கப்பட்டது. அந்த 17.76 ஏக்கர் நிலங்கள் கொடுக்க வனத்துறை மூலம் ஒத்திசைவு தொடர்பாக கடிதம் ஒன்று எழுதப்பட்டது. இந்திய அரசு அதன் எல்லைகோடுகளை சரியாக குறிக்கவில்லை என்று மறுபடியும் திருப்பியனுப்பியிருக்கிறது. மறுபடியும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களுக்கு அந்தக் கடிதம் சென்று, மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் அது குறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி சரியாக அந்த எல்லைகளை வரையறுத்து மீண்டும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது. அந்த உத்தரவை எதிர்பார்த்து வேலைகள் நடக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனத்துறை உத்தரவை எதிர்பார்த்து வேலைகள் நடக்கலாம். செண்பகத்தோப்பு ஆனாலும், ராஜா தோப்பு ஆனாலும் இந்தப் பதிலைத்தான் மாண்புமிகு

1989 மே 4]

அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இந்த அணைக் கட்டுகின்ற திட்டங்களாலே உணவு உற்பத்தி எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி விரைவாக வனத்துறையினுடைய உத்தரவை பெற்று அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே' இப்படிப்பட்ட அணைகளைக் கட்டுவதற்கு ஒரு பெரிய தலைவலியாக இருப்பது இப்போது மைய அரசு போட்டிருக்கிற சட்டந்தான். வனத் துறை பகுதியிலிருந்து நாம் 50 ஏக்கர் நிலம் அணை கட்டுவதற்காக எடுக்க வேண்டுமென்றால், அதற்காக 100 ஏக்கர் ரெவின்யூ லேண்ட்டை திருப்பி வனத் துறைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டால், அடுத்து அவர்கள் கிளப்புகிற கேள்வி, சரளைக்கல் நிலமாக இருக்கிறது, ஓடைப் புறம்போக்காக இருக்கிறது. இது தேவையில்லை என்று சொல்வி நன்னிலம் பகுதியில் நஞ்சை நிலமாகக் கொடுங்கள் என்று கேட்பார்கள் போல இருக்கிறது. அதையும் ஒத்துக்கொண்டு செய்தால், இப்போது ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். டெபாசிட் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே போனால் தமிழ்நாட்டிலே எந்த அணையையும் கட்ட முடியாத சூழ்நிலை உருவாகும். இதை மத்திய அரசுக்கு இந்த அரசு விவரித்து கடிதம் எழுதுயிருக்கிறது. எழுதும், மீண்டும் வாய்ப்பு கிடைக்கும்போது நேரிலும் இது குறித்து வாதாடும் இத்தகைய தடைகளை அகற்றினால்தான் பாசனத்திற்காகக் கட்டப்படும் அணைகளை விரைந்து கட்ட முடியும்.

மலைவாழ் மக்களுக்கு சலுகைகள்.

204—(*வினா எண். 454) திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்களுக்கு உள்ள சலுகைகள் மேட்டூர் வட்டபால மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கும் நீட்டிக்கப்படுமா?